# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2032/26 - 2017 අගෝස්තු මස 16 වැනි බදාදා - 2017.08.16

2032/26 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு - திருத்தியமைக்கப்பட்ட இலக்கம் 01**

2013, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 1840/34 இனைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு கீழ்க்காட்டப்பட்டுள்ள பிரகாரம் திருத்தியமைப்பதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழு கட்டளை பிறப்பித்துள்ளது.

**1. 7.3.2.3. பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவினை பதிலீடு செய்ய வேண்டும் :**

7.3.2.3 அனுபவம்.- உரிய தினத்திற்கு அரச சேவையில் நிரந்தர நியமனம் ஒன்றில் ஆகக்குறைந்தது 5 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டுமென்பதோடு அது தொடர்பாக திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கங்கள் அவ்வாறே தொடர்ந்திருக்கும்.)

**2. 7.3.2.5 பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உப பிரிவுகளின் இறுதியில் தொடர் இல. (iv) என பின்வரும் பிரிவு உள்ளடக்கப் படும் :**

7.3.2.5 வேறு :

(iv) உரிய தினத்திற்கு உடன் முன்னரான 5 வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

**3. 8.3 ஆம் பிரிவு நீக்கப்பட்டு பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்பட்டுள்ளது :**

8.3 நடைமுறைப்படுத்தும் அதிகாரி - பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது நியமன அதிகாரியினால் அதிகாரம் வழங்கப்பட்ட நிறுவனமொன்று.


1A - G 26081 — 09 (2017/08)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

***4. 10.3.1.1 ஆம் பந்தியின் (அ) (iii) ஆம் பிரிவினை நீக்கி அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்பட்டுள்ளது :***

(iii) *பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்தினை சித்தியடைந்து சேவையில் 05 வருட முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள அலுவலராக இருத்தல்.*

***5. 10.3.1.2 ஆம் பந்தி நீக்கப்பட்டு பின்வரும் பந்தி பதிலீடு செய்யப்பட்டுள்ளது :***

*10.3.1.2 தரமுயர்வு வழங்கும் முறை.-* அதி உயர் தரத்து வெற்றிடங்களில் 50% இனைக் கொண்டவர்களுக்குரிய நியமனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைவதற்காக குறித்த ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40 புள்ளிகளைப் பெற வேண்டும். தகைமையுடைய விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் நியமனங்கள் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையில் விண்ணப்பதாரிகளின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களைப் பரீட்சிப்பதாக மாத்திரம் அமைவதோடு அங்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. (பாடத்திட்டம் மற்றும் புள்ளி வழங்கும் நடைமுறை இணைப்பு 09 இல் தரப்பட்டுள்ளன.)

***6. 10.3.2.2 ஆம் பந்தி நீக்கப்பட்டு பின்வரும் பந்தி பதிலீடு செய்யப்பட்டுள்ளது :***

*10.3.2.2 தரமுயர்வு வழங்கும் முறை.-* அதி உயர் தரத்து வெற்றிடங்களில் 50% இனைக் கொண்டவர்களுக்குரிய நியமனங்கள் திறமையின் அடிப்படையில் இடம்பெறும். அதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்குப் பதிலாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் உளச்சார்பு பரீட்சைக்குத் தோற்றி ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்திருத்தல் வேண்டும். அவற்றின் பெறுபேறு மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் மூலம் சேவை மூப்பு மற்றும் அனுபவம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் ஒழுங்குமுறைக்கு ஏற்ப முன்னுரிமை தீர்மானிக்கப்படும். ஆணைக்குழுவின் மூலம் நியமிக்கப்படும் குழுவின் முன்னிலையில் தகைமைகள் பரீட்சிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் தோற்றுதல் வேண்டும். அந்நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. (இணைப்பு 10)

***7. இணைப்பு 04 இன்கீழ் காட்டப்பட்டுள்ள 'குறிப்பு'ப் பகுதிக்குப் பதிலாக பின்வரும் பகுதி உள்ளடக்கப்பட வேண்டும் :***

***குறிப்பு 01.-*** *அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III ஆம் தரத்தின் வினைத்திறன்காண் தடைக்கு உரித்தான கணினிப் பரீட்சையில் பின்வரும் விடயங்களைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் விலக்களிக்கப்படுவார்கள் :*

1. *பின்வரும் நிறுவனங்களில் இருந்து வழங்கப்படும் சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணினிப் பாடநெறி பாடத்திட்டத்திற்கு சமனான பாடத்திட்டமொன்றின் கீழ்க்காணப்படும் கணினி பாடநெறியினை பயின்றுள்ள அலுவலர்கள் :*

(a) *இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்* (SLIDA)
(b) *தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை* (NAITA)
(c) *தொழிற்பயிற்சி அதிகார சபை*
(d) *தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது வேறு நிறுவனம்*
(e) *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது வேறு நிறுவனம்*
(f) *தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்*

*2. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் பதிவுசெய்து அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக்கொண்ட கணினியியல் பட்டம் அல்லது பட்டத்திற்காக கணினியியலினைப் பிரதான பாடமாகக் கொண்டு பயின்ற அலுவலர்கள்.*

***குறிப்பு 02**.- இத்திருத்தங்கள் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் 02 வருட காலம் வரை இலக்கம் 1840/34 மற்றும் 2013.12.11 ஆந் திகதிய முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாண இணைப்பு 04 இன் குறிப்பில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் கணினிப் பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படுவார்கள்.*

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

*08-1069*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.